# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2023

ஆண்டு: 5 திகதி: 17.06.2023

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி செல்வநாயகி சிவசுப்பிரமணியம்

உதவி ஆசிரியர்: செல்வி காவியா சித்திவிநாயகர்

மாணவர் பெயர்: ________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 17 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 13 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் கதையை வாசித்து, கீழே வரும் வினாக்களுக்கு விடை தருக.**

## ஒற்றுமையே பலம்

ஓர் ஆற்றின் கரையில் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அக்காட்டில் புலி, யானை, கரடி, நரி போன்ற பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அதே காட்டில் நான்கு எருதுகள் மிக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன.

அந்த எருதுகளை எப்படியாவது கொன்று தின்ன வேண்டும் என்று ஒரு புலி விரும்பியது. ஆனால் எருதுகள் நான்கும் ஒற்றுமையுடன் இருந்ததால் புலியின் எண்ணம் கைகூடவில்லை.

இந்த எருதுகளைத் தனித்தனியே பிரிக்கப் புலி நரியிடம் ஆலோசனை கேட்டது. நரியின் கெட்ட எண்ணத்தால் ஒற்றுமையாய் இருந்த எருதுகள் தனித்தனியே பிரிந்தன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் புலி அவற்றை அடித்துக் கொன்று தின்றது.

இக் கதையில் இருந்து நாம் அறியும் நீதி என்ன? நாம் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் எதிரிகள் நம்மை எளிதில் வெல்ல முடியாது. நம்மிடையே பிளவு ஏற்பட்டால் நமக்குத் தீங்கு விளையும்.

1. காட்டில் வாழ்ந்து வந்த மிருகங்கள் எவை?

___

2. எருதுகளைக் கொன்று தின்ன விரும்பியது யார்?

___

3. ஒற்றுமையாக இருந்த எருதுகளைப் பிரித்தது யார்?

___

4. ஒற்றுமையால் விளையும் நன்மை யாது?

___

5. எருதுகள் இறக்கக் காரணம் என்ன?

___

| வினா இல | 2 | புள்ளிகள் | 17 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**2.1. பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. நாய் ____________ ஆட்டியது (வாளை, வாலை, வாழை)

2. ____________ மானைத் துரத்தியது (புலி, புளி)

3. அப்பா கூறிய ____________ களைச் செய்து முடித்தேன் (வேலை, வேளை)

4. ____________ பெய்தமையால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது (மலை, மழை)

5. ____________ உண்பது உடம்பிற்கு நல்லது. (பழங்களை, பலங்களை)

(5 புள்ளிகள்)

**2.2. பின்வரும் வாக்கியங்களை வரிசைப்படுத்தி கருத்தமைய எழுதுக.**

- இவர் இராமாயணத்தைத் தமிழில் எழுதினார்.
- இவ்வாறு புகழ்வதற்குக் காரணம் அவர் எழுதிய இராமாயணமே.
- அது கம்பராமாயணம் எனப் பெயர் பெற்றது.
- அது இராமனின் கதையைக் கூறும் காவியம்.
- கம்பரை கவிச்சக்கரவர்த்தி கம்பர் என்பர்.
- கம்பர் ஒரு பெரும் தமிழ்ப் புலவர்.

(12 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**3.1. அடிக்கோடிடப்பட்ட சொல்லுக்கு அதே பொருள் தரும் வேறு சொல் (ஒத்த சொல்) தருக.**

1. இன்று எங்கள் உறவினர் வந்தார் ____________________
2. நான் காலை உணவு சாப்பிட்டேன் ____________________
3. நாம் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள் ____________________
4. அம்மா கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்தார் ____________________
5. தங்கை அழகான உடை அணிந்தாள் ____________________

(5 புள்ளி)

**3.2. அடிக்கோடிடப்பட்ட சொல்லுக்கு எதிர்க் கருத்துள்ள சொல் எழுதுக.**

1. எனது சட்டை பழையது. ____________________
2. எங்கள் வீட்டில் மிக உயர்ந்த மரம் ஒன்று இருக்கிறது. ____________________
3. புகழ்ச்சியினால் மகிழ்ச்சி, ஆனால் ____________________யினால் துன்பம் ஏற்படும்.
4. எங்கள் கூட்டம் காலையில் ஆரம்பம் ஆகி பின் மாலையில் ___________ பெற்றது.
5. கண்ணன் எனது நண்பன் ஆவான். ____________________

(5 புள்ளி)

| வினா இல | 4 | புள்ளிகள் | 13 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**4.1. சேர்த்து எழுதுக**

1. உலகம் + புகழ் ______________________________

2. கருமை + கல் ______________________________

3. ஏழு + நூறு ______________________________

4. கலை + திறன் ______________________________

5. எடுத்து + காட்டு ______________________________

(5 புள்ளி)

**4.2. பின்வரும் வாக்கியங்களில் "வா" என்ற சொல்லை பொருத்தமான காலத்துக்கு மாற்றி எழுதுக.**

உதாரணம்: மாமா நாளை வருவார்

1. நான் நேற்று ______________________________

2. நாங்கள் நாளை ______________________________

3. நான் இப்போது ______________________________

4. கண்ணன் நேற்று ______________________________

5. வாணி நாளை ______________________________

6. வாணியும் கண்ணனும் நாளை ____________________

7. நீங்கள் எப்போது ______________________________?

8. அம்மா நேற்று ______________________________

(8 புள்ளி)

| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**உமது நண்பர் ஒருவருக்கு அண்மையில் உமது தமிழ்ப் பாடசாலை நடத்திய கலை விழா பற்றிக் கடிதம் ஒன்று எழுதுக.**

(நீர் பங்குபற்றிய நாடகம் பற்றியும் மற்றைய நிகழ்வுகள் பற்றியும் விபரித்து எழுதலாம்)

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைப் பற்றி 15 வசனங்களுக்குக் குறையாது எழுதுக**

1. தமிழர்கள் கொண்டாடும் பண்டிகைகளில் ஒன்றைப் பற்றி எழுதுக.
2. தமிழ் வளர்த்த பெரியார்களில் ஒருவரைப்பற்றி எழுதுக.
   (வள்ளுவர், பாரதியார், கம்பர், ஔவையார்.........)
3. உமது விடுமுறை நாள்களைக் கழித்த விதம்.
4. மறக்க முடியாத சம்பவம் ஒன்று.